Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 24/2023

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | வீட்டுகுடித்தனம் |
| பெயர் | - | திவ்யா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மணிக்குமார் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர். நகர் | வயது | - | 32 |
| சாதி | - | - | | | |

**17.10.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை** :

1. நான் வால்பாறை எம்.ஜி,ஆர் நகரில் வசித்து வீட்டு குடித்தனம்செய்து வருகிறேன். கடந்த 05-02-2023 அன்று இரவு 7.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அ.சா.1 சபரிகார்த்திக் வீட்டிற்கு முன்பாக நானும், நந்தினி, பிரவீனா ஆகிய மூவரும் நின்று பேசிக்கொண்டு இருந்தோம்.

2. அப்போது ஆஜர் எதிரி வின்சென்ட் வந்தார். பேசிக்கொண்டு இருக்கும்போது வந்து ஏன்டீ தேவிடியா முண்டைகளா என்ன உங்களுக்கு ரோட்டுல நின்னு பேச்சு என்று சத்தம் போட்டுக்கொண்டு இருந்தார். அப்போது சபரிகார்த்திக் வந்து என்ன பொம்பளைங்கள பேசியிட்டு இருக்க என்று கேட்டதற்கு அப்படிதாண்டா பேசுவேன் தாயோலி மவனே என்று சபரியை பார்த்து ஆஜர் எதிரி சொன்னார்.

3. அப்புறம் தண்ணீ போடனும் ஜோப்ல இருந்து காசை எடுத்துதா அப்படி என்று சொல்லி கல்லை எடுத்து சபரியை அடிக்கவந்தார். இதை பார்த்து பக்கத்தில் இருந்த மதன், என் வீட்டுக்காரர் மணிக்குமார் என்னடா எல்லாரையும் அடிக்கவர்ற என்று கேட்டதற்கு கல்லை போட்டுவிட்டு ஓடிவிட்டார். நாங்களும் பயந்துகொண்டு சபரிவீட்டிற்குள் போய்விட்டோம்.

4. அதன்பிறகு ஜெயிலுக்கு போய்யிட்டு வந்தபிறகும் இரண்டு மாதம் கழித்து மீண்டும் வந்து என்னிடம் பிரச்சனை செய்தார். உன் கணவரை கொன்று விட்டு உன் பெட் ரூம் எங்க இருக்கு என்று பார்ப்பேன் என்று சொன்னார். கெட்டவார்த்தையாக பேசுவார். குழந்தையை கொல்லாமல்

விடமாட்டேன் உன் உயிரா உன் புள்ளைங்க உயிரா என்று நீயே முடிவு பண்ணிக்கோ அப்படினு சொன்னார்.

5. சபரி கொடுத்த கேசை வாபஸ் வாங்கு என்று எங்களிடம் அடிக்கடி தகராறு செய்தார். நந்தினி வீட்டு சிமெண்டு ஓட்டு மீது ஏறி கல்லை எடுத்து வீசுவார். குழந்தையின் முன்பு மிகவும் அசிங்கமாக பேசுவார். ஆஜர் எதிரி எடுத்து அடிக்கவந்த கல்லை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ள கல் தான் அது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை